**AKHBAR : THAIMOLI**
**MUKA SURAT : 1**
**RUANGAN : GENERAL NEWS**

# PERUBAHAN DALAM SISTEM KESIHATAN

## சுகாதார முறையில் மிகப் பெரிய மாற்றம்!

**கோலாலம்பூர், அக். 9:** பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜிப் துன் ரசாக் நாளை தாக்கல் செய்யவிருக்கும் வரவு செலவுத் திட்டம் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டின் சுகாதார முறையை மேலும் வலுப்படுத்துவதோடு நாட்டின் சுகாதார முறையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அதன் அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் எஸ். சுப்ரமணியம் தெரிவித்திருக்கிறார்.

2015 வரவு செலவுத் திட்டத்தைக் காட்டிலும், 11ஆவது மலேசியத் திட்டத்துக்கே தமது அமைச்சு அதிக முக்கியத்துவம் வழங்கவிருக்கிறது. 10ஆவது மலேசியத் திட்டத்தில் விடுப்பட்ட திட்டங்களை நிறைவு செய்வதற்கான ஒதுக்கீடுகளை வழங்கும் ஒரு வரவு செலவுத் திட்டமாக 2015 வரவு செலவுத் திட்டம் அமையும் என்று அவர் கூறினார்.

பங்சாரில் செவ்வாய்க்கிழமை மலேசிய சுகாதார சுற்றுலா மன்றத்தின் தலைமை நிர்வாக அதிகாரிகள் மாநாட்டில் கலந்து கொண்டப் பின்னர் டாக்டர் எஸ். சுப்ரமணியம் இவ்வாறு பேசினார்.

இதனிடையே, டிங்கி காய்ச்சலுக்கு மாற்று சிகிச்சையாக பப்பாளி இலைச் சாறு பயன்படுத்துவதை சுகாதார அமைச்சு இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

இந்த பப்பாளி இலைச் சாறை பயன்படுத்துவதற்கு முன்பாக, ஐஎம்ஆர் எனப்படும் மருத்துவ ஆய்வுக் கழகம் அது குறித்த அதிகமான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப் பட்டிருக்கிறது.

நாட்டில் பல பகுதிகளில், குறிப்பாக சிலாங்கூர் மாநிலத்தில் டிங்கி காய்ச்சல் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதன் தாக்கம் மக்களை பெருமளவு பாதித்திருப்பதுடன், அதற்கு மாற்று வழி அல்லது சிகிச்சையைத் தேடுவதில் பலர் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றனர் என்று டாக்டர் எஸ். சுப்ரமணியம் தெரிவித்தார்.

**Bajet 2015 yang akan dibentangkan pada hari esok oleh Perdana Menteri Datuk Seri Najib akan mengukuhkan sistem kesihatan negara dan melakukan perubahan besar dalam sistem kesihatan dalam lima tahun akan datang, dinyatakan oleh Menteri Kesihatan YB Datuk Seri Dr S.Subramaniam.**